தொடக்கப்பள்ளி

ஆண்டிறுதித் தேர்வு – தமிழ் மொழி

தொடக்கநிலை மூன்று

தாள் 1 ( கட்டுரை )

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு <u>60 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை எழுது . படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன . நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் .




| | |
|---|---|
| பணப்பை | யோசனை தோன்றியது |
| பிடுங்கி | ஓங்கி அடித்தான |
| உரக்கக் கத்தினார் | அக்கம் பக்கத்தில் இருந்த |
| தப்பிக்க முயன்றான் | நன்றி |
| திருட்டைப் பார்த்த | துணிச்சலைப் பாராட்டினார் |

P3 SA2
ROSE

# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 3

Name: ______________________________ (      )

Class: Pri 2 (          )

Date: ______________

Parent's signature: ____________________

**INSTRUCTIONS TO CANDIDATES**

**Follow all instructions carefully.**
**Answer all questions.**

| Maximum Marks | Marks Obtained |
| --- | --- |
| | |

பெயர் : ________________ வகுப்பு : 3-__ தேதி :________

சொற்பொருள் (மதிப்பெண் 5)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

1. பள்ளி இடைவேளையில் நண்பர்கள் சேர்ந்து விளையாடுவர்.

1. பிரிவாக 2. விதவிதமாக
3. ஒன்று கூடி 4. திரளாக ( )

2. சிட்டுக்குருவிகள் கழுகைப் பார்த்து அஞ்சின.

1. பயந்தன 2. நடுங்கின
3. விழுந்தன 4. சிரித்தன ( )

3. என் தாயார் ஓய்வு நேரத்தில் நூலகத்திற்குச் செல்வார்.

1. தினத்தில் 2. மாலையில்
3. காலத்தில் 4. பொழுதில் ( )

4. நாங்கள் உணவைச் சுவைத்துச் சாப்பிட்டோம்.

1. உண்டு 2. ரசித்து
3. விழுங்கி 4. ருசித்து ( )

5. இன்று எனக்கு இன்பமான நாள்.

1. மகிழ்ச்சியான 2. முக்கியமான
3. விசேஷமான 4. நிம்மதியான ( )

மூவிடப் பெயர் வினை (மதிப்பெண் 5)

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.**

6. ________________ வானத்தில் உயரமாகப் பறக்கும்.

1. சிறுவர்கள்  2. சிங்கங்கள்
3. கழுகுகள்  4. நீங்கள்  (   )

7. மாலதியும் அவளது தாயாரும் தினமும் மெதுவோட்டம் __________.

1. ஓடுவார்  2. ஓடுவார்கள்
3. ஓடுவாள்  4. ஓடும்  (   )

8. ________________ யாருக்காக காத்திருக்கிறீர்கள் ?

1. நீங்கள்  2. அவர்கள்
3. நாங்கள்  4. அவை  (   )

9. பள்ளி விடுமுறையில் நானும் என் பெற்றோரும் இந்தியாவுக்குச் ________________.

1. சென்றேன்  2. சென்றனர்  (   )
3. சென்றோம்  4. சென்றன

10. ____________ உனக்கு பிடித்த நடிகரின் பெயரைச் சொல்.

1. நீ  2. நடிகை  (   )
3. நான்  4. அவன்  (   )

## வேற்றுமை (மதிப்பெண் 5)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

11. என் அம்மாவின் __________ சித்தி என்று அழைப்பேன்.

1. தங்கையில்
2. தங்கைக்கு
3. தங்கையை
4. தங்கையோடு ( )

12. என் பாட்டியும் __________ பள்ளிச் சுற்றுலாவுக்கு வந்தார்.

1. எங்களை
2. எங்களுடன்
3. எங்களால்
4. எங்களுக்கு ( )

13. மான் __________ தனியாக புல் மேய்ந்தது.

1. காட்டில்
2. காட்டுக்கு
3. காட்டை
4. காட்டின் ( )

14. __________ அறையில் ஒரு கணினி உள்ளது.

1. என்னுடன்
2. என்னால்
3. என்னுடைய
4. எனக்காக ( )

15. கீழே விழுந்த பரதனின் __________ காயம் ஏற்பட்டது.

1. காலை
2. காலுக்கு
3. காலின்
4. காலில் ( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

பகுதியைப் படித்துக் கேள்விகளுக்குப் பதில் எழுது.

ஒரு காட்டில் சில புறாக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. அவற்றிற்கு நாள்தோறும் நல்ல இரை கிடைத்தது. அதை ஒரு காகம் கவனித்தது. ஆகவே, அது தன் கூட்டத்தைப் பிரிந்து புறாக் கூட்டத்தில் சேர ஆசைப்பட்டது.

எனவே, காகம் தன் மீது வெள்ளைச் சாயத்தைப் பூசிக் கொண்டு புறாக்களிடம் சென்றது. அவை காகத்தைப் புறா என்று நம்பித் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டன. காகம் புறாக்களோடு சில நாள்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தது. ஒருநாள் காகம் தன்னை மறந்து 'கா....கா' என்று கத்தியது. அதைக் கேட்டதும் புறாக்கள் உண்மையை அறிந்து கொண்டன. அவை உடனே, காகத்தைக் கொத்தி விரட்டின.

காகம் வேறு வழியின்றித் தன்கூட்டத்தைத் தேடிச் சென்றது. ஆனால், மற்றக் காகங்களுக்கு அதனை அடையாளம் தெரியவில்லை. ஆகவே, அவை அந்தக் காகத்தைத் தம் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை. அது தனியே நின்று தவித்தது.

16. புறாக்கள் ஏன் மகிழ்ச்சியாக வாழ்ந்தன ?

1) காட்டில் இருந்ததால்
2) இரை கிடைக்காததால்
3) தினமும் இரை கிடைத்ததால்
4) அவற்றைக் காகம் கவனித்ததால் ( )

17 . காகம் ஏன் தன்மீது வெள்ளைச் சாயத்தைப் பூசிக் கொண்டது ?

1) அழகாக இருப்பதற்கு
2) இரை சாப்பிடுவதற்கு
3) புறாவாக மாறுவதற்கு
4) புறாக் கூட்டத்தில் சேர்வதற்கு ( )

18. புறாக்கள் ஏன் காகத்தைக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டன ?

1) காகம் 'கா....கா' என்று கத்தியதால்
2) காகம் புறாக்களைப் போல் இருந்ததால்
3) காகம் புறாக்களிடம் கேட்டுக் கொண்டதால்
4) காகம் மகிழ்ச்சியாக வாழ்ந்ததால் ( )

19. புறாக்கள் ஏன் காகத்தை விரட்டின ?

1) உண்மையைத் தெரிந்து கொண்டதால்
2) காகம் தன்னை மறந்ததால்
3) காகத்தைப் பிடிக்காமல் போனதால்
4) காகம் மகிழ்ச்சியாக இல்லாததால் ( )

20. காகம் ஏன் தனியே நின்று தவித்தது ?

1) அதற்குக் கூட்டத்தில் சேர தெரியாததால்
2) காகங்களுக்கு அந்தக் காகத்தை அடையாளம் தெரியாததால்
3) காகம் புறாக்களைத் தேடியதால்
4) காகத்திற்கு வெள்ளைச் சாயம் பிடிக்காததால் ( )

ஒலி வேறுபாடு (மதிப்பெண் 5)

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.**

21. என் அப்பா சுவரில் ______________ அடித்தார்.

1. ஆனி 2. ஆணி ( )

22. புலி காட்டில் ____________ தேடி அலைகிறது.

1. இரை 2. இறை ( )

23. என் வீட்டில் நான்கு ________________ உள்ளன.

1. அரைகள் 2. அறைகள் ( )

24. பள்ளி மணி __________ கேட்டதும் மாணவர்கள் வரிசையில் நின்றனர்.

1. ஒலி 2. ஒளி ( )

25. மல்லிகையின் ____________ அனைவரையும் கவரும்.

1. மனம் 2. மணம் ( )

செய்யுள் (மதிப்பெண் 4)

கீழ்க்காணும் செய்யுளை நிரப்புவதற்குச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

26. ஒப்புரவு ________________.

1. பழகு
2. ஒழுகு
3. விரும்பு
4. செய் ( )

27. ஏற்பது ________________.

1. கைவிடேல்
2. புகழ்ச்சி
3. இகழ்ச்சி
4. விளம்பேல் ( )

28. ஐயம் ______________ உண்.

1. கேட்டு
2. தந்து
3. கொடுத்து
4. இட்டு ( )

29. ________________ கரவேல்.

1. முயல்வது
2. இயல்வது
3. ஆறுவது
4. உடையது ( )

முன்னுணர்வுக் கருத்தறிதல் (மதிப்பெண் )
சரியான விடையின் எண்ணை எடுத்து அடைப்பினுள் எழுதுக.


நாங்கள் தமிழ்ப்பாடத் தேர்வைச் சிறப்பாகச் செய்தோம். அதனால் மகிழ்ச்சி அடைந்த ஆசிரியர் எங்களை 30. ___( )___ அனுமதித்தார். நாங்கள் கோலி விளையாட 31. ___( )___ செய்தோம். நாங்கள் கோலியை 32. ___( )___ வைத்தோம். பிறகு தூரத்தில் நின்று குறி 33. ____( )____ அடித்தோம். நான் மூன்று கோலிகள் வென்றேன். நாங்கள் 34. ____( )____ விளையாடி மகிழ்ந்தோம். கோலி விளையாடுவது ஒரு நல்ல பொழுதுபோக்காகும்.


| | | | |
|---|---|---|---|
| 1. | பார்த்து | 6. | முடிவு |
| 2. | உயரமாக | 7. | பெருமையாக |
| 3. | விளையாட | 8. | கண்டு |
| 4. | ஒற்றுமையாக | 9. | வரிசையாக |
| 5. | ஏற்பாடு | 10. | பேச |

விளம்பரத்தைப் படி:

## சிறுவர் தின சிறப்புக் காட்சி

பாலர் பள்ளி , தொடக்கப்பள்ளி
மாணவர்கள் காண வரலாம்.





**சிறுவர் தின பள்ளி விடுமுறை அன்று நடைபெறும்.**

இடம் : சன்டெக் சிட்டி கண்காட்சிக் கூடம்

நேரம் : காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை

இடம் பெறும் நிகழ்ச்சிகள் யாவும் சிறுவர்களைச் சிரித்து மகிழ வைப்பது நிச்சயம் !!!!

- கோமாளியின் வேடிக்கைக் காட்சிகள்
- `மிக்கி மவுஸ், டோனாட் டக்` பாட்டுப் பாடி, ஆட்டம் ஆடும்.
- மாயா ஜாலா காட்சி
- இலவச பலூன் கிடைக்கும்
- சிறுவர்களுக்கான போட்டிகள் நடைபெறும்
  ( வெற்றி பெறுவோருக்கு விலை உயர்ந்த பரிசுகளும் கிடைக்கும் )

ஏற்பாட்டாளர்கள்: மக்கள் கழகம் , என். டி. யு. சி. நிறுவனம்.

சரியான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுதுக.
(மதிப்பெண் 6)

35. இந்த சிறப்பு நிகழ்ச்சி ஏன் நடைபெறுகிறது ?

1. பள்ளி விடுமுறைக்காக
2. பாலர் பள்ளி மாணவர்களுக்காக
3. சிறுவர் தினத்திற்காக
4. சிறுவர்களை மகிழ்விப்பதற்காக ( )

36. இதில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் எப்படி இருக்கும் ?

1. சிறுவர்களை சிரித்து மகிழ வைக்கும்
2. நம்மை சிரித்து மகிழ வைக்கும்
3. சிறுவர்களை ஆடி பாட வைக்கும்
4. பள்ளிச் சிறுவர்களை சிரிக்க வைக்கும் ( )

37. நிகழ்ச்சிக்குச் செல்லும் சிறுவர்களுக்கு என்ன கிடைக்கும் ?

1. இலவச குளிர்பானம்
2. இலவச பலகாரம்
3. இலவச மிட்டாய்
4. இலவச பலூன் ( )

**சுயவிடைக் கருத்தறிதல் (மதிப்பெண் 10)**
**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு சரியான விடையை எழுதுக.**

குமுதா பள்ளி முடிந்து வீட்டை நோக்கி நடந்தாள். தன் அண்டை வீட்டாரின் கதவின் முன் இருவர் பூட்டைத் திறக்க முயல்வதைக் கண்டாள். அவள் உடனே தன் வீட்டிற்குள் சென்று தொலைபேசி மூலம் காவலருக்குத் தகவல் கொடுத்தாள்.

சிறிது நேரத்தில் காவலர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களைக் கண்ட திருடர்கள் தப்பி ஓட முயன்றனர். ஆனால் காவலர்கள் திருடர்களைத் துரத்திப் பிடித்தனர்.

காவலர்கள் குமுதாவின் நற்செயலைப் பாராட்டினர். வேலை முடிந்து வீடு திரும்பிய அண்டை வீட்டாரும் அவளுக்கு நன்றி கூறி பாராட்டினர்.

மறுநாள் குமுதாவின் புகைப்படமும் நற்செயலும் செய்தித்தாளில் வந்தது. இதைக் கண்டு குமுதாவின் பெற்றோர் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

38. குமுதா எப்போது வீடு திரும்பினாள் ?

39. குமுதா அண்டை வீட்டின் முன் எதைக் கண்டாள் ?

40. குமுதா தான் பார்த்ததை யாரிடம் கூறினாள் ?

41. காவலர்களைக் கண்ட திருடர்கள் என்ன செய்தார்கள் ?

42. குமுதாவின் பெற்றோர் ஏன் மகிழ்ச்சி அடைந்தனர்?

P3
TESTPAPER 7

**விடைகள் ( Primary 3 - SA 2 2013 )**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. (3) | 2. (1) | 3. (3) | 4. (4) | 5. (1) |
| 6. (3) | 7. (2) | 8. (1) | 9. (3) | 10. (1) |
| 11. (3) | 12. (2) | 13. (1) | 14. (3) | 15. (4) |
| 16. (3) | 17. (4) | 18. (2) | 19. (1) | 20. (2) |
| 21. (2) | 22. (1) | 23. (2) | 24. (1) | 25. (2) |
| 26. (2) | 27. (3) | 28. (4) | 29. (2) | |
| 30. (3) | 31. (6) | 32. (9) | 33. (1) | 34. (4) |
| 35. (3) | 36. (1) | 37. (4) | | |

38. குமுதா பள்ளி முடிந்து வீடு திரும்பினாள்.

39. குமுதா அண்டை வீட்டின் முன் இருவர் பூட்டைத் திறக்க முயல்வதைக் கண்டாள்.

40. குமுதா தான் பார்த்ததை காவலர்களிடம் கூறினாள்.

41. காவலர்களைக் கண்ட திருடர்கள் தப்பி ஓட முயன்றனர்.

42. குமுதாவின் புகைப்படமும் நற்செயலும் செய்தித்தாளில் வந்ததால் அவள் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்.